தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் நல்வழிகாட்டுதலின்படி நேற்று (13.2.2025) கொரட்டூர், வார்டு84, சாவடி தெருவிலுள்ள மாநகராட்சி மேல்நிலைப்பள்ளியில் ரூ.2.10 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள புதிய ஆய்வக கட்டிடத்தை இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் .பி.கே.சேகர்பாபு திறந்து வைத்தார். இந்நிகழ்ச்சியில் மேயர் திருமதி.ஆர்.பிரியா ராஜன் அம்பத்தூர் சட்டமன்ற உறுப்பினர் ஜோசப் சாமுவேல் , மாநகராட்சி இணை ஆணையாளர் (கல்வி) முனைவர்.ஜெ.விஜயா ராணி, மத்திய வட்டார துணை ஆணையாளர் .கே.ஜே.பிரவீன் குமார், மண்டலக் குழுத்தலைவர் பி.கே.மூர்த்தி, மண்டல அலுவலர் .க.தமிழ்செல்வன், மாமன்ற உறுப்பினர் .டி.எஸ்.பி.ராஜகோபால், மாநகராட்சி அலுவலர்கள் மற்றும் உள்ளாட்சி பிரதிநிதிகள் உடனிருந்தனர்.

காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட தி.மு.க. கழக அவசர செயற்குழு உறுப்பினர்கள் கூட்டத்தில் காஞ்சிபுரம் வடக்கு மாவட்டச் செயலாளர்அமைச்சர் தா.மோ.அன்பரசன் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார். அருகில் மாவட்ட அவைத்தலைவர் த.துரைசாமி, மாவட்டக் கழக துணைச் செயலாளர்கள் இ.கருணாநிதி எம்.எல்.ஏ., வரலட்சுமி மதுசூதனன், எம்.எல்.ஏ., து.மூர்த்தி, மாவட்ட கழகப் பொருளாளர் வெ.விஸ்வநாதன் மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளனர்.

கோவை – மதுரை நகரங்களுக்கான

மெட்ரோ ஒப்புதலை ஒன்றிய அரசு விரைந்து வழங்க வேண்டும்!

முதல்வர் மு.க.ஸ்டாலின் சமூக வலைதளப் பதிவு!

சென்னை, பிப். 14 -

கோவை, மதுரை நகரங்களுக்கான மெட்ரோ ஒப்புதலையும் ஒன்றிய அரசு வழங்க வேண்டும் என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளப் பக்கத்தில் பதிவிட்டு, சென்னை மெட்ரோ ரயில் இரண்டாம் கட்டப் பணிகள் குறித்தும் விவரித்துள்ளார்.

சென்னை மெட்ரோ இரயில் இரண்டாம் கட்டப் பணிகள் குறித்து தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின்

சமூக வலைதளப் பதிவு வருமாறு:-

தலைவர் கலைஞர் அவர்கள் முதலமைச்சராகவும் நான் துணை முதலமைச்சராகவும் இருந்தபோது தொடங்கப்பட்ட சென்னை மெட்ரோ இரயில் பணிகள், தற்போதைய நமது திராவிட மாடல் அரசில் விரைந்து முன்னேற்றம் கண்டு வருகின்றன. முந்தைய ஆட்சியின் தாமதங்களுக்குப் பிறகு, இரண்டாம் கட்டப் பணிகளை, இந்தியாவிலேயே முதன்மையாக மாநில அரசின் நிதியைக் கொண்டே தொடர்ந்து வந்தோம்.

அண்மையில், நமது கோரிக்கையை ஏற்று, ஒப்புதல் வழங்கப்பட்ட ஒன்றிய அரசின் பங்களிப்போடு இன்னும் விரைவாகச் செயல்படுத்தி வருகிறோம்.

2025ஆம் ஆண்டின் இறுதிக்குள் பூந்தமல்லி-போரூர் இடையேயான மெட்ரோ இரயில் சேவை தொடங்கி வைக்கப்படும். மீதமுள்ள பணிகளையும் குறித்த காலத்துக்குள் நிறைவேற்ற, சென்னை மெட்ரோ இரயில் நிர்வாகத்துக்கு நான் அறிவுறுத்தியுள்ளேன். இப்பணிகள் முழுமையாக நிறைவுறும்போது, இந்தியாவிலேயே நகரப் பொதுப் போக்குவரத்து இணைப்பினில் சென்னை புதிய தர அளவுகோல்களை நிர்ணயிக்கும்!

நடைபெற்று வரும் பணிகளை இன்று ஆய்வு செய்தபோது, நாம் தொடங்கிய திட்டம் இன்று செயலாக்கம் பெற்று, மேலும் விரிவடைந்து வருவதைக் கண்டு பெருமகிழ்ச்சி அடைந்தேன். இந்த நேரத்தில் கோவை, மதுரை நகரங்களுக்கான மெட்ரோ ஒப்புதலையும் விரைந்து ஒன்றிய அரசு வழங்க வேண்டும் என மீண்டும் கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பதிவிட்டுள்ளார்.

தி.மு.க.வை அழிப்பேன் என்றவர்கள்தான் அழிந்து போனார்கள்!

அறிவாலயத்தில் ஒரு புல்லைக்கூட பிடுங்க முடியாது!

கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ். பாரதி எச்சரிக்கை!

சென்னை, பிப்.14-

அண்ணாமலையின் பேச்சுக்கு தி.மு.க. அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி காட்டமாக பதில் தெரிவித்துள்ளார்.

அறிவாலயத்தை பிடுங்குவேன் என்று சொன்னவர்கள் எல்லாம் தூள் தூளாகி விட்டனர். காணாமல் போய் விட்டார்கள். எனவே அண்ணாமலையும் அந்த வரிசையில் இடம் பெறப் போகிறார். அறிவாலயத்தில் உள்ள ஒரு புல்லைக் கூட அண்ணாமலையால் பிடுங்க முடியாது.

தி.மு.க.வை அழிப்பேன், ஒழிப்பேன் என்று சொன்னவர்கள் எல்லாம் மொத்த பேரும் அழிந்து போயிருக்கிறார்கள். இதுதான் வரலாறு. இதெல்லாம் அண்ணாமலைக்கு தெரிய வாய்ப்பில்லை.

இந்த மாதிரி அண்ணாமலை பேசுவதால் தி.மு.க. தொண்டர்களுக்கு எழுச்சியும், உணர்ச்சியும் தான் ஏற்படுமே தவிர யாரும் சோர்வடையமாட்டார்கள்.

அதுமட்டுமல்ல 2026ல் ஊழல் பெருச்சாளிகள் சிறைக்கு செல்வதை பார்க்கும் வரை இருப்பேன் என்கிறார். 2026 அல்ல 3026ல் கூட அது நடக்காது.

இப்படியே அவர் பேசுவது நல்லதுதான். தி.மு.க.வுக்கு ஒரு சோதனை என்றால் தலைவர் கலைஞர் சொல்வார் "தூங்கினால் என் தொண்டன் கும்பகர்ணன். எழுந்திரிச்சி நின்றால் இந்திரஜித்" அந்த வகையிலே இந்த மாதிரி பேசினால், தி.மு.க.காரர்கள் அத்தனை பேரும் இந்திரஜித் ஆவார்கள்.

இவ்வாறு அவர் கூறினார்.

கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் பிறந்த நாள்!

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டக் கழகம் சார்பில் பல்வேறு நிகழ்ச்சிகள்!

மாவட்டச் செயலாளர் – அமைச்சர் தா.மோ.அன்பரசன் தகவல்!

காஞ்சிபுரம், பிப்.14–

கழகத் தலைவர் – தமிழ்நாடு முதல்–அமைச்சர் தளபதி அவர்களின் 72–வது பிறந்தநாளையொட்டி காஞ்சிபுரம் வடக்கு மாவட்டத்தில் வார்டு – கிளைகளில் மார்ச் 1 அன்று கழக கொடி ஏற்றி இனிப்புகள் வழங்கிடுவது என்றும் 40–க்கும் மேற்பட்ட ஆதரவற்றோர் இல்லங்களில் தங்கியுள்ள ஆதரவற்றோர்களுக்கு அறுசுவை உணவு – உடை வழங்கிடுவது, மருத்துவ முகாம் – இரத்ததான முகாம் – கண் சிகிச்சை முகாம் மரக்கன்று நடுதல் உள்ளிட்ட பல்வேறு உதவிகளை செய்திடுவது என்றும் இளைஞர்களை ஊக்குவிக்கும் வகையில் கிரிக்கெட் – கைப்பந்து – கால்பந்து – கூடைப்பந்து – இறகுபந்து – கபடி உள்ளிட்ட பல்வேறு விளையாட்டுப் போட்டிகளை தொடர் பொதுக்கூட்டங்கள் நடத்தி, மார்ச் மாதம் முழுவதும் மாவட்டமே விழாக்கோலம் காணும் வகையில் பிரமாண்டமான நிகழ்ச்சிகள் நடத்திடுவது என்று காஞ்சிபுரம் வடக்கு மாவட்டக் செயற்குழு உறுப்பினர்கள் கூட்டத்தில் முடிவெடுக்கப்பட்டுள்ளது என்று மாவட்டச் செயலாளர் – அமைச்சர் தா.மோ.அன்பரசன் கூறியுள்ளார்.

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டக் கழக அவசர செயற்குழு உறுப்பினர்கள் கூட்டம் குன்றத்தூர் - மாங்காடு சாலை, சிக்கராயபுரம் அருகில் அமைந்துள்ள கார்த்திக் பேலஸ் மண்டபத்தில் அவைத் தலைவர் த.துரைசாமி தலைமையில் நடைபெற்றது.

மாவட்டக் கழக துணைச் செயலாளர்கள் இ.கருணாநிதி, எம்.எல்.ஏ., வரலட்சுமி மதுசூதனன், எம்.எல்.ஏ., து.மூர்த்தி மற்றும் மாவட்ட கழகப் பொருளாளர் வெ.விசுவநாதன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

மாவட்ட செயலாளர் - அமைச்சர் தா.மோ.அன்பரசன் தொடக்கத்தில் அனைவரையும் வரவேற்று பேசினார்.

தலைமை தீர்மானக்குழு செயலாளர் மீ.அ.வைதியலிங்கம், தாம்பரம் மாநகரச் செயலாளர் எஸ்.ஆர்.ராஜா, எம்.எல்.ஏ., சட்டமன்ற தொகுதி பார்வையாளர்கள் கே.எஸ்.ரவிச்சந்திரன், ராகுல் காந்தி, ரத்னா லோகேஸ்வரன், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் வீ.தமிழ்மணி, ஆர்.டி.அரசு, காஞ்சிபுரம் மாவட்ட ஊராட்சி குழுத் தலைவர் படப்பை ஆ.மனோகரன், தாம்பரம் மாநகராட்சி மேயர் க.வசந்தகுமாரி, துணை மேயர் கோ.காமராஜ், தலைமை செயற்குழு உறுப்பினர்கள் ஜி.சி.அன்புச்செழியன், க.அன்புச்செல்வன், ஆதிமாறன், பகுதி செயலாளர்கள் என்.சந்திரன், பி.குணாளன், வே.கருணாநிதி, இ.ஜோசப் அண்ணாதுரை, த.ஜெயக்குமார், பெருங்களத்தூர் எஸ்.சேகர், எஸ்.இந்திரன், டி.காமராஜ், மாடம்பாக்கம் நடராஜன், ஏ.கே.கருணாகரன், இ.எஸ்.பெர்னாட், செம்பாக்கம் சுரேஷ்,

ஒன்றியச் செயலாளர்கள் ந.கோபால், எஸ்.டி.கருணாநிதி, பையனூர் எம்.சேகர், ஏ.வந்தேமாதரம், மூவரசம்பட்டு ரவி, ஆப்பூர் பி.சந்தானம், எம்.டி.லோகநாதன், நகரச் செயலாளர்கள் டி.பாபு, ஜெ.சண்முகம், எஸ்.ஜபருல்லா, கோ.சத்தியமூர்த்தி, எம்.கே.டி.கார்த்திக், பேரூர் செயலாளர்கள் மு.தேவராஜ், ஜி.டி.யுவராஜ், ஆர்.சதீஷ்குமார்,

தொ.மு.ச. பேரவைச் செயலாளர் இரா.பொன்னுராம், கழக தகவல் தொழில் நுட்ப அணி துணைச் செயலாளர் அ.தமிழ்மாறன், கழக சுற்றுச்சூழல் அணி துணைச் செயலாளர் சாய் ஜெயகாந்த் பாரதி,

தலைமைப் பொதுக்குழு உறுப்பினர்கள் எம்.எஸ்.கே.இப்ராகிம், ஆர்.டி.பூபாலன், கீதாஆனந்தன், க.தேவேந்திரன், எஸ்.சதீஷ், ஆர்.எஸ்.சங்கர், எம்.செல்வகுமார், மா.கணேஷ்பாபு, இரா.பாஸ்கரன், செ.அருள்தேவி, மு.ரஞ்சன், ஜி.ஜேந்திரன் ராமு, கழக அணிகளின் மாவட்ட அமைப்பாளர்கள் கோல்டு டி.பிரகாஷ், தையூர் வீ.விஜயகுமார், ப.இராமமூர்த்தி, டி.கே.கமலகண்ணன், கே.மணிகண்டன், கோ.ஜானகிராமன், எல்.பிரபு, எஸ்.ஆல்பர்ட், ஜா.செந்தில்தேவராஜ், பா.ஞானபிரகாசம், தி.க.பாஸ்கரன், சசிகலா, த.வினோத்குமார், டி.பி.செந்தில்குமார், பொன்.ரமேஷ் கவி, ஜான் தினகரன், ஆர்.கோவிந்தன், வி.ரவிச்சந்திரன், கே.ஆர்.ஆனந்தன், டி.எஸ்.எம்.ஜெயகரன், எஸ்.கர்ணன், டி.ஆர்.சாரதி பெரிய நாயகம், பெப்சி கண்ணன், ஆர்.ஆர்.ஜெயராம்மார்த்தாண்டம், தாம்பரம் மாநகர இளைஞரணி அமைப்பாளர் பி.கே.ஏ.சத்தியபிரபு உள்ளிட்ட கழக நிர்வாகிகள் கலந்துக் கொண்டனர்.

இக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்:-

தமிழ்நாட்டில் உள்ள அனைத்து தரப்பு மக்களும் மனம் மகிழ்ந்து பாராட்டுகின்ற வகையில், திராவிட மாடல் நல்லாட்சி நடத்தி - இந்தியாவிற்கே வழிகாட்டும் வகையில் எண்ணிலடங்கா திட்டங்களை நிறைவேற்றி இந்தியாவின் நம்பர் 1 முதல்வர் என்ற வரலாற்றுச் சாதனையை படைத்த - நம்முடைய உயிரினும் மேலான அன்புத் தலைவர் தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் 72-வது பிறந்த நாளை காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம் முழுவதும் பட்டி - தொட்டியெங்கும் மிகவும் சிறப்பான வகையில் வருகிற மார்ச் மாதம் முழுவதும் எழுச்சியுடன் கோலாகலமாக கொண்டாடுவது என்றும்,

அவரது பிறந்த நாளான 1.3.2025 அன்று காலை 9.00 மணிக்கெல்லாம், காஞ்சி வடக்கு மாவட்டம் முழுவதும் உள்ள ஒன்றியம் - பகுதி - நகர - பேரூர்களில் உள்ள அனைத்து கிளைக் கழகங்களிலும், கழக கொடி தோரணங்கள்கட்டி, ஒலிபெருக்கி அமைத்து கழகக் கொடி தோரணங்களை அழகுற கட்டி, ஒலிபெருக்கி அமைத்து, கழக கொடியேற்றி, இனிப்புகளை வழங்கிடுவது என்றும் நம்முடைய மாவட்டத்தில் உள்ள 40-க்கும் மேற்பட்ட ஆதரவற்றோர் இல்லங்களில் உள்ள ஆதரவற்றோர்களுக்கு அன்று மதிய உணவு - உடைகளை வழங்கிடுவது என்றும், காஞ்சிபுரம் வடக்கு மாவட்டக் கழகம் ஒருமனதாக முடிவெடுக்கிறது.

தமிழினம் காக்க தன்னையே அர்ப்பணித்துக் கொண்டு - அல்லும் - பகலும் அயராது உழைத்து உயர்ந்திட்ட நம்முடைய நெஞ்சம் நிறைந்த அன்புத் தலைவர் - தமிழ்நாடு முதல்வர் தளபதி அவர்களின் 72-வது பிறந்த நாளையொட்டி, அவருடைய தன்னலமற்ற உழைப்பையும் - அவர் கழகத்திற்காக ஆற்றிய அரும் பெரும் பணிகளையும், 4 ஆண்டு கால திராவிட மாடல் ஆட்சியின் அளப்பறிய சாதனைகளையும் - நாட்டு மக்களுக்கு விரிவாக விளக்கிடும் வகையில் மார்ச் 1-ஆம் தேதி முதல் மார்ச் மாதம் முழுவதும் காஞ்சிபுரம் வடக்கு மாவட்டத்தில் உள்ள பகுதி - நகரம் - ஒன்றியம் - பேரூர் கழகங்களின் சார்பிலும் மற்றும் மாவட்டக் கழக அணிகளின் சார்பிலும், தொடர் பொதுக்கூட்டங்களை எழுச்சியான முறையில் நடத்திடுவது என்றும், இப்பொதுக்கூட்டத்திலேயே ஏழை - எளியவர்கள் பயன்பெறுகின்ற வகையில் பல்வேறு நலத்திட்ட உதவிகளை வழங்கிடுவது என்றும் காஞ்சிபுரம் வடக்கு மாவட்டக் கழகம் ஏகமனதாக தீர்மானிக்கிறது.

தமிழர்கள் வாழ்வு வளம் பெற வேண்டும் என்பதற்காக, தன்னையே அர்ப்பணித்துக் கொண்டு தமிழக மக்களுக்காக நாளும் உழைத்து வரும் தரணி போற்றும் தமிழ் நாட்டின் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் 72-வது பிறந்த நாளையொட்டி ஏழை - எளிய மக்கள் பயன் பெறும் வகையில் கழக நிர்வாகிகள் ஏற்பாட்டில்,

மருத்துவ முகாம் - இரத்ததான முகாம் - கண் சிகிச்சை முகாம் மரக்கன்று நடுதல் உள்ளிட்ட பல்வேறு உதவிகளை செய்திடுவது என்றும் இளைஞர்களை ஊக்குவிக்கும் வகையில் கிரிக்கெட் - கைப்பந்து - கால்பந்து - கூடைப்பந்து - இறகுபந்து - கபடி உள்ளிட்ட பல்வேறு விளையாட்டுப் போட்டிகளை நடத்தி, வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகளை வழங்குவது என்றும், செங்கல்பட்டு அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை உள்ளிட்ட அரசு மருத்துவமனைகளில் மார்ச் 1-ஆம் தேதி அன்று பிறக்கும் குழந்தைகளுக்கு தங்கம் மோதிரம் அணிவிப்பது என்றும், காஞ்சிபுரம் வடக்கு மாவட்டக் கழகம் ஒருமனதாக தீர்மானிக்கிறது.

இவ்வாறு தா.மோ.அன்பரசன் அறிக்கையில் கூறியுள்ளார்.

அம்பத்தூர் மண்டலத்தில் ரூ.20 கோடியில் முடிவுற்ற திட்டப் பணிகள்!

அமைச்சர் பி.கே.சேகர்பாபு திறந்து வைத்தார்!

சென்னை, பிப். 14 -

முதலமைச்சர் அவர்களின் நல்வழிகாட்டுதலின்படி நேற்று (13-02-2025) அமைச்சர் பி. கே. சேகர்பாபு, அம்பத்தூர் 7வது மண்டலம், கொரட்டூர், வார்டு 84, சாவடி தெருவிலுள்ள மாநகராட்சி மேல்நிலைப்பள்ளியில் ரூ.2.10 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள புதிய ஆய்வக கட்டிடம், புதூர், வார்டு80, சித்துஓரகடம் மாநகராட்சி ஆரம்பப் பள்ளியில் ரூ.1.85 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள கூடுதல் வகுப்பறைகள் கொண்ட கட்டிடம், வார்டு81க்குட்பட்ட அம்பத்தூர் ஓ.டி., வடக்கு பூங்கா தெருகாமராஜர் பெண்கள் மேல்நிலைப்பள்ளி, வார்டு86க்குட்பட்ட அத்திப்பட்டு, ரெட்டி தெரு, பாடிகுப்பம், வார்டு93, பிள்ளையார் கோயில் தெருவிலுள்ள மாநகராட்சி உயர்நிலைப் பள்ளியில் ரூ.97 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள கூடுதல் வகுப்பறைகள் கொண்ட பள்ளி கட்டிடம் ஆகிய 5 இடங்களில் நடைபெற்ற நிகழ்ச்சிகளில், ரூ.11.52 கோடி மதிப்பில் 20 முடிவுற்ற பணிகளை மக்கள் பயன்பாட்டிற்குத் திறந்து வைத்தும், ரூ.8.31 கோடி மதிப்பில் 6 புதிய திட்டப்பணிகளை அடிக்கல் நாட்டி, பணிகளை தொடங்கி வைத்தார்.

20 முடிவுற்ற பணிகள் கூடுதல் பள்ளிக் கட்டடம்

வார்டு82ல் பொதுப்பணித்துறையின் சார்பில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியில் ரூ.52 இலட்சம் மதிப்பில் மூன்று வகுப்பறைகளுடன் கூடிய கூடுதல் பள்ளிக் கட்டடம், வார்டு84க்குட்பட்ட சாவடி தெரு சென்னை மேல்நிலைப் பள்ளியில் நமக்கு நாமே திட்ட நிதியில் ரூ.2.10 கோடி மதிப்பில் ஆய்வகக் கட்டடம், வார்டு80, சித்து ஓரகடம் சென்னை தொடக்கப் பள்ளியில் நமக்கு நாமே திட்டத்தில் ரூ.1.59 கோடி மதிப்பில் கூடுதல் பள்ளிக் கட்டடம் மற்றும் மேம்படுத்தும் பணி, வார்டு81, கல்யாணபுரம் கோகிலாம்மாள் தெரு சென்னை தொடக்கப் பள்ளியில் நமக்கு நாமே திட்டத்தில் ரூ.84.44 இலட்சம் மதிப்பில் 2 வகுப்பறைகளுடன் கூடிய பள்ளிக் கட்டடம் மற்றும் மேம்படுத்தும் பணி, பெருந்தலைவர் காமராஜர் அரசு மகளிர் மேல்நிலைப் பள்ளியில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியில் ரூ.38 இலட்சம் மதிப்பில் கூடுதல் பள்ளிக் கட்டடம் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் மேம்பாட்டு நிதியில் ரூ.37 இலட்சம் மதிப்பில் கூடுதல் பள்ளிக் கட்டடம், வார்டு85க்குட்பட்ட மங்களபுரம் பாடசாலை தெருசென்னை நடுநிலைப்பள்ளியில் நமக்கு நாமே திட்டத்தில் ரூ.1.43 கோடி மதிப்பில் கூடுதல் வகுப்பறைகள் மற்றும் மேம்படுத்தும் பணி, காமராஜபுரம், அம்பேத்கர் தெரு சென்னை நடுநிலைப்பள்ளியில் சிங்கார சென்னை 2.0 திட்ட நிதியில் ரூ.43 இலட்சம் மதிப்பில் இரண்டு வகுப்பறைகளுடன் கூடிய முதல் தளம் மற்றும் படிக்கட்டுகள், வார்டு86ல் உள்ள அரசு மேல்நிலைப்பள்ளியில் நாடாளுமன்ற உறுப்பினர் மேம்பாட்டு நிதியில் ரூ.20 இலட்சம் மதிப்பில் முதல் தளத்தில் கூடுதல் வகுப்பறைக் கட்டடம், வார்டு87க்குட்பட்ட மதியழகன் நகர், சர்ச் சாலைசென்னை தொடக்கப் பள்ளியில் மாமன்ற உறுப்பினர் மேம்பாட்டு நிதியில் ரூ.40 இலட்சம் மதிப்பில் இரண்டு வகுப்பறைக் கட்டடம், வார்டு93க்குட்பட்ட பாடிக்குப்பம் பிள்ளையார் கோயில் தெரு சென்னை உயர்நிலைப்பள்ளியில் நமக்கு நாமே திட்டத்தில் ரூ.18.60 இட்சம் மதிப்பில் கூடுதல் வகுப்பறைக் கட்டடம் மற்றும் சிங்கார சென்னை 2.0 திட்ட நிதியில் ரூ.97 இலட்சம் மதிப்பில் நான்கு வகுப்பறைகளை கொண்ட பள்ளிக் கட்டடம் என மொத்தம் 12 பள்ளிகளில் ரூ.9.42 கோடி மதிப்பில் 34 வகுப்பறைகள், 4 ஆய்வக அறைகள் மற்றும் 1 அரங்கக் கூடம் இன்று பயன்பாட்டிற்குத் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

உயர்கோபுர மின் விளக்குகள்

நாடாளுமன்ற உறுப்பினர் மேம்பாட்டு நிதிகளில் வார்டு 81க்குட்பட்ட அம்பத்தூர் பேருந்து நிறுத்தம் அருகில் ரூ.5.24 இலட்சம் மதிப்பிலும், வார்டு85க்குட்பட்ட காமராஜபுரம், இணை ஆணையர் அலுவலம் அருகில் ரூ.5.22 இலட்சம்மதிப்பிலும்,வார்டு 86க்குட்பட்ட மண்ணூர்பேட்டை, பிள்ளை யார் கோயில் தெருவில் ரூ.5.26 இலட்சம் மதிப்பில் என மொத்தம் ரூ.15.72 இலட்சம் மதிப்பில் 3 இடங்களில் 12மீ. உயர்மின் கோபுர விளக்குகள் இன்று பயன்பாட்டிற்கு ஒளிரூட்டப்பட்டது.

மேலும், வார்டு85க்குட்பட்ட ஆசிரியர் காலனி நேரு தெருவில் சிங்கார சென்னை 2.0 திட்ட நிதியில் ரூ.15 இலட்சம் மதிப்பில் விளையாட்டுத் திடல், வார்டு82க்குட்பட்ட மேனாம்பேடு சவுக்கார் தெருவில் மாமன்ற உறுப்பினர் மேம்பாட்டு நிதியில் ரூ.25 இலட்சம் மதிப்பில் உடற்பயிற்சிக் கூடம், வார்டு 84க்குட்பட்ட ருக்மணியம்மாள் தெருவில் நாடாளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியில் ரூ.25 இலட்சம் மதிப்பில் குழந்தைகள் மையக் கட்டடம் மற்றும் பெரிய வண்ணான் குளத்தில் சிங்கார சென்னை 2.0 திட்ட நிதியில் ரூ.41 இலட்சம் மதிப்பில் மழைநீர் உறிஞ்சும் பூங்கா, வார்டு87ல் சிங்கார சென்னை 2.0 திட்ட நிதியில் ரூ.88.13 இலட்சம் மதிப்பில் பஜனை கோயில் குளம் புனரமைப்பு மற்றும் சீரமைப்புப் பணி என மொத்தம் ரூ.11.52 கோடி மதிப்பில் 20 முடிவுற்ற பணிகளை இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்.

அடிக்கல் நாட்டு விழா

வருவாய் நிதியின் கீழ், வார்டு80க்குட்பட்ட பானு நகர் 13வது நிழற்சாலையில் ஓரகடம் மயானபூமியில் ரூ.49.50 இலட்சம் மதிப்பிலும், சித்து ஓரகடம் மயானபூமியில் ரூ.38 இலட்சம் மதிப்பிலும் சுற்றுச்சுவர் அமைக்கும் பணிகள், மூலதன நிதியின் கீழ், வார்டு85க்குட்பட்ட மங்களபுரத்தில் உள்ள கருமாகுளத்தை ரூ.1.82 கோடி மதிப்பிலும், வார்டு86க்குட்பட்ட ரெட்டி தெருவில் உள்ள ரெட்டி குளத்தை ரூ.2.27 கோடி மதிப்பிலும் புனரமைத்தும் மேம்படுத்தும் பணிகள், சிங்கார சென்னை 2.0 திட்ட நிதியின் கீழ், வார்டு 87க்குட்பட்ட கண்ணகி நகர் மயானபூமியில் ரூ.1.67 கோடி மதிப்பிலும், பாண்டுரங்கபுரம் மயானபூமியில் ரூ.1.67 கோடி மதிப்பில் என 2 மயானபூமிகளில் நவீன வசதிகளுடன் கூடிய எரிவாயு எரியூட்டகம் அமைக்கும் பணிகள் என மொத்தம் ரூ.8.31 கோடி மதிப்பில் 6 புதிய திட்டப்பணிகளுக்கு இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் அடிக்கல் நாட்டி பணிகளைத் தொடங்கி வைத்தார்.

இந்நிகழ்ச்சிகளில், மேயர் திருமதி ஆர். பிரியா ராஜன், ஜோசப் சாமுவேல் எம்.எல்.ஏ., மாநகராட்சி இணை ஆணையாளர் (கல்வி) முனைவர் ஜெ.விஜயா ராணி, மத்திய வட்டார துணை ஆணையாளர் கே.ஜெ.பிரவீன் குமார், மண்டலக்குழுத் தலைவர் பி.கே.மூர்த்தி, மண்டல அலுவலர் க.தமிழ்செல்வன், மாமன்ற உறுப்பினர்கள் டி.எஸ்.பி.ராஜகோபால், திருமதி.நாகவள்ளி பிரபாகர், திருமதி.உமா சந்தானம், டாக்டர் பூர்ணிமா, எம்.இ.சேகர், கமல், திருமதி.பொற்கொடி, திருமதி.சாந்தகுமாரி, திருமதி.உஷா, ரமேஷ், மாநகராட்சி அலுவலர்கள் மற்றும் உள்ளாட்சி பிரதிநிதிகள் உடனிருந்தனர்.

தலைமைச் செயலகத்தில் நேற்று (13.02.2025) உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி தலைமையில் சட்டமன்ற அறிவிப்புகளின் தற்போதைய நிலை, நேரடி நெல் கொள்முதல், பொதுவிநியோகம் மற்றும் துறையின் செயல்பாடுகள் குறித்து துறை சார்ந்த அலுவலர்களுடன் ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அரசு முதன்மைச் செயலாளர் சத்யபிரத சாகு, தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவன நிர்வாக இயக்குநர் சு. பழனிசாமி, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக நிர்வாக இயக்குநர் அ. சண்முகசுந்தரம், உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை இயக்குநர் .த.மோகன். கூட்டுறவுச் சங்கங்களின் கூடுதல் பதிவாளர் சா.ப.அம்ரித், குடிமைப் பொருள் வழங்கல் குற்றப் புலனாய்வுத் துறை காவல் துறைத் தலைவர் ரூபேஷ் குமார் மீனா. மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.